DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 136/2020 CW : 1

Name : சினத் சாபிரா Age – 48

W/o : அனிஸ் மீரான் பாபு Village – திருத்தணி

Taluk : திருத்தணி

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 09.03.2026

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

1) கருப்பு செஞ்சி நாயகர் வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பி.வா.சா.ஆ.26 ஆவணம் அப்போதைய தாசில்தாரர் வழங்கிய ஆவணம் ஆகும். அந்த ஆவணத்தின் படி கருப்புசெஞ்சிநாயகர் 15.12.1969–ல் காலமானார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.26 ஆவணம் 04.10.2022 அன்று வழங்கப்பட்டது. சுமார் 58 ஆண்டுகள் கழித்து தான் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 2022–ல் இறப்பு சான்றிதழ் ஆவணத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.26 ஆவணம் வழங்கப்பட்டுள்ளது. 58 ஆண்டுகள் கழித்து வாரிசு சான்றிதழ் வழங்க எங்களுக்கு எந்த வித அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. இறப்பு சான்றிதழ் பதிவு செய்யப்பட்டுவிட்டதால் மேல் அதிகாரியிடம் ஒப்புதல் கேட்கவேண்டிய அவசியம் கிடையாது. காலதாமதம் சம்மந்தமாக அந்த சான்றிதழ்–ல் எந்த விவரமும் குறிப்பிடவில்லை. சின்னதுரை என்பவர் கருப்புசெஞ்சிநாயகர் என்பவரின் வாரிசுதாரர் என்பது வி.ஏ.ஓ. மற்றும் ஆர்.ஐ விசாரணையில் நாங்கள் தெரிந்து கொண்டோம். 2022–ல் வி.ஏ.ஓ. மற்றும் ஆர்.ஐ கொடுத்த

அறிக்கையின் படி தற்போது வி.ஏ.ஓ. மற்றும் ஆர்.ஐ சான்று வழங்கியுள்ளார்கள். 2015–ற்கு பின்பு அனைத்து பரிவர்தனைகளும் இணையதம் ஆகிவிட்டதால் நாங்கள் வி.ஏ.ஓ. மற்றும் ஆர்.ஐ கொடுத்த அறிக்கையை இணைக்கும் பழக்கம் கிடையாது. அதற்குண்டான அவசியம் கிடையாது. அந்த ஆவணம் இணைக்கவேண்டியது என்றால் சரியல்ல. எங்கள் கைவசம் இருக்கும் ஆவணத்தை சரிபார்க்காமல் வாரிசு சான்றிதழ் வழங்கியுளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. 2015 முன் தான் அந்த ஆவணம் சம்மந்தமான குறிப்புரை எழுதப்பட்டிருந்தது தற்போது இணையதளம் ஆகிவிட்டால் அவ்வாறு எழுத பழக்கம் கிடையாது. குறிப்பாக எதற்காக ஆவணம் வழங்கப்படுகிறது என்ற காரணத்தை 2015 பின் எழுதும் வழக்கம் கிடையாது. நீதிமன்ற விசாணைக்கு பயன்படுத்த முடியாது என்று சொல்லிக்கொடுக்கும் வழக்கம் தற்போது கிடையாது.

2) அப்போது இருந்த தாசில்தார் வழக்கு நிலுவையில் இல்லை என்று உறுதி செய்து தான் பி.வா.சா.ஆ.26 ஆவணத்தை வழங்கியிருந்திருப்பார். அவ்வாறு வழக்கு நிலுவையில் இருந்தால் கூட வாரிசு சான்றிதழ் வழங்ககூடாது என்று எந்த வித உத்தரவு கிடையாது. 4ம் பிரதிவாதி இந்த வழக்கிற்காக அந்த ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. கருப்புசெஞ்சிநாயகர் என்ற ஒரு நபர் கிடையாது என்றாலும் 4ம் பிரதிவாதி அவருக்கு மகன் கிடையாது என்றால் சரியல்ல. வி.ஏ.ஓ. மற்றும் ஆர்.ஐ சரியாக கிராமத்தில் விசாரிக்காமல் சான்று வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.26 ஆவணம் வழக்கில் பயண்படுத்தி கொள்வதற்காக வழககில் நிலுவையில் இருக்கும் போது தயார் செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. கருப்புசெஞ்சிநாயகர் வாரிசு சான்று சம்மந்தமான கோப்புகள் **நீ.ம.சா.ஆ.1 ஆகும்.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி அளிக்கிறேன். இல்லாத ஒரு நபரக்கு இறப்பு சான்றிதழ் வழங்கும் வழக்கம் சார் பதிவாளர்

அலுவலகத்தில் கிடையாது. வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக ஏதோனும் பிரச்சனை இருந்தால் பிறப்பு மற்றும் இறப்பு சட்டப்படி ஆர்.டி.ஓ அவரிடம் தான் மேல்முறையீடு மனு வழங்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக இன்ற வரை எந்த வித மேல்முறையீடு மனு வழங்கப்படவில்லை. வி.ஏ.ஓ. மற்றும் ஆர்.ஐ விசாரணையில் வாதி ஆட்சேபணை செய்ததாக எந்த வித குறிப்பும் காணப்படவில்லை. வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக 3ம் தரப்பினர் ஆட்சேபணை செய்ய எந்த வித உரிமை கிடையாது என்றால் சரிதான். நாங்கள் பிறப்பு மற்றும் இறப்பு சட்டத்தின் படி முழுமையாக விசாரித்து பி.வா.சா.ஆ.26 ஆவணம் வழங்கியுள்ளோம் என்றால் சரிதான்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.